**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 29.08.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **28.08.2019**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதி **2016**–இன்படி, Solid Waste Management Policy for Rasipuram Municipality என்பதனை நாமக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு, **1** பக்கம் அச்சிட ரூ. **2100/–** வீதம் **7** பக்கத்திற்கு ரூ. **14700/–** கட்டணத் தொகை பாரத மாநில வங்கியில் செலுத்தி, சேலம், அரசு அச்சகத்திற்கு ரசீதினை வழங்க, ரூ. **14700/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** அவசர அவசியத்தைக் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, மேற்காணும் கட்டணத் தொகை ரூ. **14700/–** SUC நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(746/19/எச்1)**

**தீர்மானம் எண். 613**

அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **306** (28A) மற்றும் **2019**–ஆம் வருடத்திய தழ்நாடு சட்டம் **12**–இன்கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன இராசிபுரம் நகராட்சியில் தடை செய்யப்பட்டு அதற்கென தண்டணைகள் மற்றும் அபராதத் தொகை பற்றிய அறிவிப்பு தினத்தந்தி நாளிதழில் கடந்த **17.07.2019** அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதில், இராசிபுரம் நகராட்சியின் இந்த துணை விதிகள் தொடர்பாக ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் நாளிதழில் வெளியிட்ட நாளிலிருந்து **30** நாட்களுக்குள் பொது மக்கள் இராசிபுரம் நகராட்சி ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதுநாள் வரையில் பொது மக்களிடமிருந்தும், வணிக நிறுவன உரிமையாளரிடமிருந்தும் எவ்வித ஆட்சேபணைகள் மற்றும் கருத்துகள் பெறப்படவில்லை. இதற்கான மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** தண்டணைகள் மற்றும் அபராதத் தொகை பற்றிய விவரங்களை நாமக்கல், மாவட்ட அரசிதழில் வெளியிடவும், சேலம், அரசு கிளை அச்சகத்தில் அச்சிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
**3)** மேற்காணும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(747/19/எச்1)**

**தீர்மானம் எண். 614**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் லாரி TN 28 AT 8969 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 105000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்படி செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/2131/19)**

**தீர்மானம் எண். 615**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி TN 28 AS 0104 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 95000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/2112/19)**

**தீர்மானம் எண். 616**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /— மா. கணேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி